தனுஷ்கோடிக்கு ரயில்பாதை.

*வினா எண், 573 — திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) தனுஷ்கோடிக்கு உடனடியாக ரயில் பாதை போட வேண்டும் என்று மத்திய அரசை மாநில அரசு கேட்டுக் கொண்டுள்ளதா :

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?—

திரு. ப. கோ. கிட்டு (அமைச்சரின் பேரவைச் செயலர்)

(அ) மற்றும் (ஆ) இல்லை.

அரசு மருத்துவமனை ஆலங்குடி

*வினா எண். 574— திரு. த. புஷ்பராஜு : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :—

(அ) புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி நகரப் பஞ்சாயத்தில் உள்ள அரசினர் மருத்துவ மனையில் கட்டட வசதியை அதிகப்படுத்தி, காலரா நோய்ப் பிரிவைத் தனியாக அமைக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

மாண்புமிகு திரு. திருச்சி ஆர். சௌந்திரராஜன் :

(அ) ஆம்.

(ஆ) காலரா நோய் பிரிவிற்கென கட்டடம் கட்டுவது, பொது சுகாதார விதிகளின்படி அந்தந்த ஊராட்சியின் பொறுப்பாகும். ஆலங்குடி அரசினர் மருத்துவமனையில் காலரா பிரிவு கட்ட ஆலங்குடி ஊராட்சி முன்வந்து, இதைச் செய்வதற்கான ஒப்புதலை ஊரக வளர்ச்சி இயக்குநரிடம் கோரியுள்ளது.